DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No.186/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | லெட்சுமணன் (Pw.6) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 14th day August of 2023
(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது )

**முதல் விசாரணை:–**

1. நான் தற்போது ஆத்திபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் மில்லில் வேலை பார்த்துவருகிறேன். சுமார் 3 வருடத்திற்கு முன்பு நான் முதல் சிப்டில் மில் வேலையில் இருந்தபோது கோணப்பனநேந்தல் பேருந்து நிறுத்தத்தில் விபத்து என்று சொன்னார்கள். யார் என்று கேட்டபோது அழகர்சாமிக்கு பைக்கில் சென்றபோது விபத்து ஆகிவிட்டதாக சொன்னார்கள். மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள் நான் அங்கு சென்று பார்த்தேன். வேறு விபரங்கள் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிசார் விசாரணையில் இதையே சொன்னேன்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)

அ.த.கு.வி :–

2. கடந்த 16.01.2018ம் தேதி காலை 5.45 மணியளவில் புகார்தாரர் நாகராஜன் மற்றும் அழகர்சாமி இருவரும் செக்யூரிட்டி வேலை முடித்து கோணப்பனநேந்தல் விலக்கு பஸ்டாப்பிற்கு நடந்து சென்று கொண்டிருந்தபோது டிஎண். 67 AH 6467 என்ற பதிவு எண் கொண்ட டிவிஎஸ் ஸ்டார் சிட்டி வாகனத்தை எதிரி பால்முருகன் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து ரோட்டை கடக்க சென்ற அழகர்சாமி மீது மோதி விபத்து ஏற்படுத்தி அவரது இறப்புக்கு காரணம் ஆனார் என்று அந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்ததாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எ.த.கு.வி –

3.இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.